# வாக்குமூலம்

## நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு

## வழக்கு எண்.சி.சி.எண்.75/2021

## வழக்கு சாட்சி.அ.சா.1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தங்கராஜ் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | பழனிச்சாமி | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2025**

முதல் விசாரணை

நான் தற்போது சித்தோட்டில் குடியிருந்து கொண்டு, தொழில் செய்து வருகிறேன்.

கடந்த 24.09.2020-ம் தேதி சித்தோட்டில், பாலாஜி நகரில் உள்ள எனது வீட்டிற்கு முன் நிறுத்தப்பட்டிருந்த Hero Honda CD Deluxe இருசக்கர வாகனம் தொலைந்து போனது. இது தொடர்பாக சித்தோடு காவல் நிலையத்தில் புகார் அளித்தேன். என்னிடம் தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார் மனு **அ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 3 மாதங்களுக்கு பின்னிட்டு போலீசார் எனது வாகனம் கிடைத்துவிட்டதாக தெரிவித்தார்கள். அதன் பேரில் நீதிமன்றத்தில் பெற்றுக் கொண்டேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

போலீசார் எழுதிய புகாரில் நீங்கள் கையொப்பம் செய்துள்ளீர்கள் என்றால், சரிதான். சம்பவம் நடந்த அன்றே நீங்கள் புகார் கொடுத்துவிட்டீர்கள் என்றால், சரிதான். சாட்சி பட்டியலில் உள்ள முருகன், துளசிமணி, சாமியப்பன், ராமலிங்கம், ராமச்சந்திரன், மூர்த்தி ஆகியோர்கள் உங்களுக்கு தெரிந்தவர்கள் என்றால், சரிதான். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில் காவல் நிலையம் சென்று புகார் அளிக்கவில்லை என்றாலும், சரியல்ல.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.

**வாக்குமூலம்**

**நீதித்துறை நடுவர் எண்.3 நீதிமன்றம், ஈரோடு**

**வழக்கு எண்.சி.சி.எண்.75/2021**

**வழக்கு சாட்சி.அ.சா.2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமலிங்கம் | ஜாதி | : | |
| தந்தை பெயர் | : | ராசா கவுண்டர் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | |
| தாலுக்கா | : | | வயது | : | |

(வழக்கின் எதிரி ஆஜர் இல்லை. எதிரியின் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது).

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.01.2025**

முதல் விசாரணை

நான் தற்போது சித்தோட்டில் குடியிருந்து வருகிறேன். நான் ஆவினில் பணியாற்றி, ஒய்வு பெற்று விட்டேன்.

தங்கராஜ் வாகனம் தொலைந்து போனது தொடர்பாக 24.09.2020-ம் தேதி சித்தோட்டில், பாலாஜி நகரில் உள்ள எனது வீட்டிற்கு முன் போலீசார் வந்து விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் வரைபடம் வரைந்து, எங்களையும் கேட்டார்கள். நான் அதற்கு சாட்சியாக கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் மட்டும அ.சா.ஆ.**2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

அ.சா.1 தங்கராஜ் புகார் அளிக்க சென்றபோது, நீங்களும் உடன் சென்றீர்கள் என்றால், சரிதான். புகாரில் நீங்கள் சாட்சி கையொப்பம் செய்தீர்கள் என்றால், சரிதான். அங்கேயே உங்கள் பெயர், விபரங்களை போலீசார் வாங்கி கொண்டார்கள் என்றால், சரிதான். நீங்கள் காவல் நிலையத்தில் வைத்து தான் பார்வை மகஜரில் கையொப்பம் செய்தீர்கள் என்றால், சரிதான். சம்பவம் நடந்த அன்றே நீங்கள் கையொப்பம் செய்தீர்கள் என்றால், சரிதான்.

எதிரி தரப்பு மறு விசாரணை

இல்லை.